புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com



ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன்
• திருவள்ளுவர் ஆண்டு 2054 • செப்டம்பர் 07, 2023 • புரட்சி 23 • முழக்கம் 34 • விலை ரூ.3.00

# ‘ஒரே நாடு; ஒரே தேர்தல்’ என்ற பாஜக திட்டத்துக்கு அம்பேத்கர் தரும் பதில்

## இந்தியா இன்றும் ஒரே தேசமாக உருவாகவில்லை

இந்தியா முழுவதும் ஒரே தேர்தல்’ என்ற முழக்கத்தை முன்வைக்கிறது பாஜக. ஆனால் இந்தியா இன்னும் ஒரே தேசமாக இருக்கவில்லை என்கிறார் அம்பேத்கர் என்று உறுதியாக கூறியதோடு வடநாடு பிற்போக்கானது, தென்னாடு முற்போக்கானது என்றும் தெளிவுப்படுத்தியிருப்பதை கழகத் தலைவர் எடுத்துக் காட்டினார்.

*சூலூரில் 30.0.2023 அன்று நடைபெற்ற கலைஞர் நூற்றாண்டு நிறைவுப் பொதுக் கூட்டத்தில் ஆற்றிய உரையின் ஒரு பகுதி.*

**கழகத் தலைவர் கொளத்தூர் மணி விளக்கம்**

அம்பேத்கர் 1955இல் ‘மொழி வழி மாநிலங்கள் பற்றிய சிந்தனைகள்’ என்ற ஒரு புத்தகம் எழுதுகிறார். அதுவரைக்கும் ஒன்றுபட்ட இந்தியா, இந்தி ஆட்சி மொழி என்றெல்லாம் பேசிக் கொண்டிருந்த அம்பேத்கர், அந்த நூலில் இந்த நாட்டில் எவ்வளவு வேறுபாடுகள் உள்ளன, கன்னியாகுமரியில் இருப்பவர்களுக்கு டெல்லி வெளிநாடு போல் தெரிகிறது. எனவே இந்தியாவிற்கு இரண்டாவது தலைநகரம் ஒன்றை அமைக்க வேண்டும் என்று எழுதுகிறார். இரண்டாவது தலைநகரமாக ஹைதராபாத்தை பரிந்துரைக்கிறார். எப்போதும் இந்தியாவுக்கு இரண்டாவது தலைநகர் வேண்டும், ஆங்கிலேயர் இருந்தபோது இரண்டாவது தலைநகரமாக சிம்லா இருந்தது; முகலாயர் ஆட்சியில் ஸ்ரி நகர் இருந்தது. என்ற ஒன்று.

மற்றொன்று இந்தி மொழிக்காக பேசுபவர்களுக்கு ஒன்றை சொல்கிறார். இப்போது நான் பேசுவது ரகசிய காப்பு பிரமாணத்தை முறித்ததாக பொருள் ஆகாது. நான் அரசியல் நிர்ணய சபை தலைவர் என்கிற முறையில் பல இடங்களுக்கு செல்கிற வாய்ப்பு உண்டு. அப்போது பெரிதும் காங்கிரஸ் காரர்கள் தான் அரசியல் நிர்ணய சபை உறுப்பினர்களாக இருந்தனர். எனவே இந்தி ஆட்சி மொழி பற்றி முடிவு செய்வதற்காக காங்கிரஸ் கமிட்டி கூட்டத்திற்கும் சென்றிருக்கிறார். அரசியல் நிர்ணய சபையில் இந்திக்கு ஆதரவாக போட்ட வாக்குகளில் ஒரு வாக்கு தான் அதிகம். காங்கிரஸ் கமிட்டி கூட்டத்திலும் சம வாக்குகள் வந்தன, கட்சித் தலைவராக இருந்த பட்டாபி சீதாராம் இந்திக்கு ஆதரவாக வாக்களித்ததால் இந்திக்கு ஒரு வாக்கு அதிகம். எனவே இந்தி பேசும் மக்களே இந்தி இந்த நாட்டின் அலுவல் மொழியாக ஒரு வாக்கு வித்தியாசத்தில் தான் வந்தது என்பதை மறந்து விடாதீர்கள். இல்லையென்றால் இந்தியாவின் பிரிவினைக்கு இது அடிப்படையாக அமைந்து விடும் என்று எழுதினார்.

அந்த நூலில் மற்றொரு செய்தியையும் குறிப்பிடுகிறார், தென்னிந்தியாவும் வட இந்தியாவும் எப்படி ஒன்றாக இருக்க முடியும் என்ற ஒரு கேள்வியையும் முன் வைக்கிறார்.

**1. வடநாட்டில் நிர்வாண சாமியார்கள் திரிகிறார்கள், தென்னாட்டில் அப்படி திரிய முடியுமா?**

**2. இங்கு உடன்கட்டை ஏறுதல் தடையில்லாமல் நடக்கிறதே, அது தென்னாட்டில் நடக்குமா?**

**3. இந்த நாட்டின் பிரதமராக நேரு வந்ததற்காக பார்ப்பனர்கள் மகிழ்ந்து போய் அவரை யாகத்தில் உட்கார வைத்து பூஜைகள் செய்து கையில் தண்டாவை கொடுக்கிறார்கள், அதே மாதிரி தென்னிந்தியாவில் செய்ய முடியுமா?**

**4. இந்த நாட்டின் குடியரசுத் தலைவர் காசிக்குச் சென்று ஐந்து பார்ப்பனர்களின் கால்களை தாம்பாலத்தில் வைத்து கழுவினாரே, அது தென்னிந்தியாவில் நடக்குமா? இது மட்டுமல்லாமல் தென்னிந்தியர்கள் முற்போக்கு சிந்தனையுடையவர்கள், வட இந்தியர்கள் பிற்போக்கு சிந்தனை யுடையவர்கள். தென்னிந்தியர்கள் கல்வியில் முன்னேறியவர்கள், வட இந்தியர்கள் கல்வியில் பின் தங்கியவர்கள். தென்னிந்தியர்களின் பண்பாடு என்பது நவீனத்துவமானது, வட இந்தியர்களின் பண்பாடு பழமையானது. எப்படி இரண்டும் ஒன்றாக இருக்க முடியும்** என்ற கேள்வியை அம்பேத்கர் எழுப்புகிறார்.

இதையெல்லாம் எழுதிவிட்டு, நான் அண்மையில் கவர்னர் ஜெனரலோடு உரையாடிக் கொண்டிருந்த போது இந்தியா ஒரு நாடாக இருக்கக் கூடாது. இரண்டு கூட்டாட்சிகள் நிறுவப்பட வேண்டும், ஒன்று தென்னிந்திய மாநிலங்கள் மட்டும் (Federation of the South) மற்றொன்று வட இந்திய மாநிலங்கள் (Federation Of the North) இரண்டு பகுதிகளிலும் சம எண்ணிக்கையில் உறுப்பியம் கொண்ட பெருங்கூட்டமைப்பு (Confederation India) ஒன்றை உருவாக்கி விடலாம். இந்தியா தொடர்ந்து ஒரே நாடாக இருக்க வேண்டுமென்றால் இவைகளை பின்பற்றினால் தான் சரியாக இருக்கும் என்பது என் கருத்து என்று அந்த நூலின் எழுதுகிறார்.

மாநில சுயாட்சியும் அதைத்தான் வலியுறுத்துகிறது. முதன் முதலில் அரசியல மைப்பு சபை உருவாக்கப்பட்ட போதும் அதேதான் கருத்து. அதில் தீர்மானங்களை முன் மொழிந்த நேரு, ஐந்து அல்லது ஆறு அதிகாரங்கள் மட்டும்தான் மைய அரசுக்கு இருக்க வேண்டும், (வெளியுறவுத் துறை, இராணுவம், நாணயம், தொலைத்தொடர்பு) மீதி அத்துணை அதிகாரங்களும் மாநிலங்களுக்குத்தான் என்று முன்மொழிந்தார்.

அதை எழுதி கொடுத்தது கிரிப்ஸ் குழு, அதன் அடிப்படையில் தான் இந்திய அரசியலமைப்பு சபை கூடுகிறது. இந்தியா விடுதலை பெறுவதற்கு முன்பே 1946ல் அரசியலமைப்பு அவை கூடிவிட்டது. அப்போது பணக்காரர்கள் வாக்களித்து தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் தான் உறுப்பினர்களாக முடியும். 10 விழுக்காட்டினருக்கு மட்டுமே வாக்குரிமை இருந்த காலம். எனவே அந்த நேரத்தில் அதை அம்பேத்கர் சொன்னார்.

அரசியல் சட்டத்தை எழுதி மக்கள் முன் வைத்த போது, முதல் கருத்தாக 26.11.1949ல் தான் அரசியல் சட்டம் ஏற்றுக் கொள்ளப்பட்டது. 25ம் தேதி அரசியல் சட்டத்தை முன்மொழிந்து அவர் பேசிய போது, நான் எழுதிய அரசியல் சட்டம் இந்த தலைமுறைக்கானது. அப்போது அமெரிக்காவை சேர்ந்த ஜெஃப்பர்சனை மேற்கோள் காட்டி, ஒவ்வொரு தலைமுறையையும் ஒரு தேசமாக கருத வேண்டும், இது இப்பொழுது இருக்கிற தலைமுறையினருக்காக எழுதியது, இது எந்த காலத்திற்கும் பொருந்தும் என்று சொல்ல முடியாது. அடுத்தது ஜனநாயகம் என்பது முற்போக்கானது தான், அதில் மிகப்பெரிய வெற்றியடைவது என்பது சர்வாதிகாரத்திற்கு இட்டுச் சென்று விடும் என்று சொல்கிறார். **“எவ்வளவு மோசமான அரசியல் சட்டமாக இருந்தாலும், அதை நிறைவேற்றுபவர் சிறந்தவராக இருப்பாரேயானால் அது சிறப்பாக வேலை செய்யும், எவ்வளவு உயர்ந்த அரசியல் சட்டமாக இருந்தாலும் அதை நிறைவேற்ற வருபவர்கள் மோசமான ஆட்களாக இருந்தால் அது ஒன்றுக்கும் பயனில்லாமல் ஆகிவிடும்”** என்ற ஒன்றைச் சொல்கிறார். அதைத்தான் தற்போது பார்த்துக்கொண்டிருக்கிறோம்.

மற்றொன்றையும் குறிப்பிடுகிறார், நான் அரசியல் சட்டத்தின் முகப்புரையில் எழுதினேன், இந்திய மக்களாகிய நாம் என்றுதான் தொடங்கும், அரசியல் உணர்வு மிக்க நண்பர்கள் ஏன் இது எல்லாம் எழுதுகிறீர்கள், இந்திய தேசத்தாராகிய நாம் என்று எழுதுங்கள் என்று கேட்டனர். அம்பேத்கர் உடனே, **“நாம் எங்கு தேசமாக இருக்கிறோம். நாம் இனிமேல் தான் தேசமாக வேண்டும். ஆயிரக்கணக்கான ஜாதிகளாக பிரிந்திருக்கிற நாம் எப்படி தேசமாக முடியும், இனிமேல் தான் தேசமாக முடியும்”** என்று சொன்னார்.

ஜாதிகள் என்பவை தேச விரோதமானது என்று அம்பேத்கர் குறிப்பிடுகிறார். ஆனால் ஒன்றிய அரசு எதையெதையெல்லாம் தேச விரோதம் என்று பேசி வருகிறது. எனவே புரட்சியாளர் அம்பேத்கர் என்ன கருத்தைக் கொண்டிருந்தாலும், பின் நாட்களில் அவற்றை நம்முடைய கருத்துகளாகத்தான் மாற்றிக் கொண்டிருக்கிறார். மாநில சுயாட்சி என்பது மிக விரிவாக பேச வேண்டிய ஒன்று, அது எவ்வளவு சிறந்த அம்சங்களை கொண்டிருக்கிறது என்பதும் பேசவேண்டிய ஒன்று, ஆனால் பேரறிஞர் அண்ணா இறுதியாக பொங்கல் விழா உரையில் செய்திகளை மட்டும் எழுதினார். கலைஞர் அதை உருவாக்கி, அதை அனைத்து மாநிலங்களையும் பேச வைத்து, அதற்காக இந்திரா காந்தி நீதிபதி சர்க்காரியா தலைமையில் ஒரு குழுவை போட்டார். பின்னாளில் வாஜ்பாய் ஆட்சிக்காலத்தில் நீதிபதி பூன்ச் தலைமையில் மாநில சுயாட்சி குறித்து அதற்காக ஒரு குழு அமைக்கப் பட்டது. ஆனால் அதையெல்லாம் பேசாமல் போய்விட்டது. பேசியது தமிழ்நாடு மட்டும்தான் என்ற காரணத்தால் தமிழ் நாட்டு முதல்வர் இந்தியாவில் இருக்கிற எல்லா மாநிலத்தில் உள்ள பாரதிய ஜனதா கட்சி அல்லாத கட்சிகளை வெறும் தேர்தல் கூட்டணியாக இல்லாமல் கொள்கை கூட்டணியாக அமைத்துக் கொண்டிருக்கிற தமிழ்நாடு முதல்வரின் முன்னெடுப்பில் இவைகள் நிறைவேற வேண்டும், நிறைவேறும் என்ற எதிர்பார்ப்போடு அந்த மாமனிதர் கலைஞருக்கு எனது தலை தாழ்ந்த வணக்கங்கள்.

## தலையங்கம்

## உதயநிதி பேசியதில் என்ன தவறு

டெங்கு, காலரா, மலேரியா நோய்களை போல சனாதனம் என்ற சமூக நோயை ஒழிக்க வேண்டும் என்று தமிழக இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேசியதை, பாஜக திரித்து பொய்களை கலந்து மக்களிடம் விற்பனை செய்யத் தொடங்கியிருப்பது அவர்களின் தரம் தாழ்ந்த பிரச்சாரத்தை வெளிப்படுத்துகிறது. உள்துறை அமைச்சர் அமித்ஷா, பாஜக தலைவர் ஜே.பி. நட்டா, நிர்மலா, அண்ணாமலை போன்றவர்களே இந்த அற்ப பிரச்சாரத்தில் இறங்கியுள்ளனர்.

சனாதன தர்மம் தான் இந்து கலாச்சாரம் என்று கூறி இந்துக்களின் எதிர்ப்பை 'இந்தியா' கூட்டணிக்கு எதிராக திருப்பி விட முயற்சிக்கிறார் அமித்ஷா. சனாதன ஒழிப்பு என்றால் இந்துக்களை இனப்படுகொலை செய்ய வேண்டும் என்று சங்கிகள் அவரது ஆதரவு ஊடகங்கள் திரிபுவாதம் செய்கின்றன, திராவிடத்தை ஒழிப்போம், காங்கிரசை ஒழிப்போம், காங்கிரஸ் இல்லாத இந்தியாவை உருவாக்குவோம் என்று பாஜக தலைவர்கள் பேசிவருகிறார்களே, அதன் அர்த்தம் அவர்களை எல்லாம் இனப்படுகொலை செய்வது என்பது தானா என்று அமைச்சர் உதயநிதி திருப்பிக் கேட்டுள்ளார். ஒரு தத்துவத்தை ஒழிப்போம் என்றால் அதை ஏற்றுக்கொண்டவர்களை இனப்படுகொலை செய்வது என்பது பாஜகவின் அணுகுமுறையாக இருக்கலாம், அதே அணுகுமுறையால் தான் காந்தியை இந்த கூட்டம் கொலை செய்தது. குஜராத்தில் இஸ்லாமிய கலாச்சாரத்தை ஒழிப்போம் என்று கூறி 2000 இஸ்லாமியர்களை படுகொலை செய்தவர்கள். அதே பார்வையில் உதயநிதி பேச்சையும் திரிக்கிறார்களா?

சனாதன தர்மம் தான் இந்தியாவின் கலாச்சாரம் என்று அமித் ஷாவும் பேசுகிறார். இதைவிட பெரும்பான்மை பார்ப்பனரல்லாத இந்துக்களின் மீது சுமத்தப்படும் இழிவு வேறு எதுவும் இருக்க முடியாது. சனாதன தர்மம் என்றால் 'பிராமணன்' உயர்ந்தவன், வணங்கத்தக்கவன், 'சூத்திரன்' அடிமைகள், படிக்க கூடாதவர்கள், சொத்துரிமை இல்லாதவர்கள், பிராமணனின் வைப்பாட்டி மக்கள் என்று மனுதர்மம் கூறுகிறது. காஞ்சி மூத்த சங்கராச்சாரியே வர்ணாசிரமத்தை பரப்ப நாடு முழுவதும் சனாதன சபைகளையும், சனாதன மாநாடுகளையும் நடத்தினார் என்பது வரலாறு. வர்ணாசிரம தர்மமே நமது தர்மம் என்று கூறியவர் ஆர். எஸ்.எஸ் தத்துவத்தை உருவாக்கிய கோல்வாக்கர் அதன் பெயர் சனாதன தர்மம் என்று எழுத்து மூலம் பதிவு செய்த்துள்ளார்.

'சனாதன தர்மம்' மாற்றத்துக்கு இடமில்லை: அப்படியே ஏற்க வேண்டும் என்பது தான் பொருள், அது சமஸ்கிருத சொல். அமைச்சர் உதயநிதியும் அதை சுட்டிக்காட்டி தனது கருத்தில் தான் உறுதியாக இருக்கிறேன் என்று உறுதியுடன் பேசியிருப்பதை பாராட்டி வரவேற்க வேண்டும்.

ஒன்றிய ஆட்சி பேசும் இந்துக்களின் சனாதன பண்பாடு தான் வண்ணார்கள், பொற்கொல்லர், எண்ணெய் ஆட்டுவோர் போன்ற விளிம்புநிலை மக்கள் தங்கள் குலத்தொழிலையே செய்ய வேண்டுமென்று கூறுகிறது. அதற்காகவே மோடி விஸ்வகர்மா திட்டத்தை அறிவித்துள்ளார். இது ராஜகோபாலாச்சாரி கொண்டுவந்த குலக்கல்வி திட்டத்தின் மறு வடிவம். இந்த சமூக அநீதியான பார்ப்பனிய திட்டங்களை முறியடித்து விளிம்பு நிலையில் தவிக்கும் சூத்திர பஞ்சம இந்துக்களுக்கு கல்வி பதவிகளுக்கான வாய்ப்புகளை வழங்கி அவர்களை அதிகார மயப்படுத்தியது தான் திராவிட இயக்கம். அதனால் தான் சனாதனம் தாண்டவமாடும் வட மாநிலங்களை விட திராவிடக் கொள்கையால் தமிழ்நாடு வளர்ச்சியடைந்து முன்னிலை பெற்று நிற்கிறது.

இந்து ராஷ்டிரம் பேசும் பாஜகவும் சங்பரிவாரங்களும் பார்ப்பன ஊது குழல்களும் விளிம்பு நிலையில் உழலும் ஏழை எளிய இந்துக்களின் வாழ்வாதார உரிமைகளை முடக்குகின்றன. விலைவாசி உயர்வு, ஜிஎஸ்டி வரி, பெட்ரோல் டீசல் விலை உயர்வு, நீட் திணிப்பு, உயர்கல்விக்கு தடை, உயர்கல்வி நிறுவங்களில் சமூகநீதி மறுப்பு, அங்கே பெரியார், அம்பேத்கர் படிப்பு வட்டத்துக்கு தடை, பெண்கள் கோயில் நுழைவு உரிமை தடுப்பு, சமஸ்கிருத இந்தி திணிப்பு என்று அடுக்கடுக்காக இந்த மக்கள் மீது சமூக பொருளாதார சுமைகளை ஏற்றிக்கொண்டே இருக்கிறது. அதே நேரத்தில் அதானி, அம்பானி போன்ற உயர்ஜாதி கோடீஸ்வர இந்துக்களை சட்டத்திற்கு எதிராக கொழுக்க வைக்கிறது. பழங்குடிச் சமூகத்தை சேர்ந்த குடியரசு தலைவரையும், குக்கி இனத்தவரையும் அவமதித்து பழிவாங்கத் துடிக்கிறது. இஸ்லாமிய கிருஸ்துவர்கள் மீது வெறுப்பைக் கக்கி உலக நாடுகளின் பிரபல ஏடுகளின் கண்டனத்திற்கும், ஒபாமா போன்ற தலைவர்களின் விமர்சனத்திற்கும் உள்ளாகிறது. இந்தியா அரசியல் கூட்டணி பன்னாட்டு பகாசூர இந்து முதலாளிகளுக்கு எதிராக விளிம்புநிலை இந்துக்களின் உரிமைக்கு குரல் கொடுக்கிறது. இப்போது நடக்கும் போராட்டமே விளிம்புநிலையில் இருக்கும் சூத்திர பஞ்சம இந்துக்களுக்கும், பார்ப்பன பன்னாட்டு சுரண்டல் இந்துக்களுக்கும் இடையே நடக்கும் போராட்டம் தான். இதற்கு அடிப்படைக் காரணம் சனாதனம். இந்த சனாதனத்தை திராவிட இயக்க தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் எதிற்கிறார், உதயநிதி ஸ்டாலின் எதிர்கிறார். சொல்லப்போனால் இந்த சனாதனம் அழிக்கப்பட வேண்டும் என்று சொன்னவர்களே பெரியாரும் அம்பேத்கரும் தான். அவர்களையும் இனப்படுகொலையாளர்களின் பட்டியலில் பாஜக சேர்த்துவிடுமா?

இந்தியா கூட்டணி ஒன்றிய ஆட்சியை நடுங்க வைத்துள்ளது, பாஜக தோல்வியை ஏறத்தாழ உறுதி செய்துவிட்டது. அதற்காக இந்த கூட்டணியை உடைக்க இத்தகைய சாணக்ய குறுக்கு வழிகளில் பாஜக முயற்சித்து பார்க்கிறது. இதில் தோற்கப் போவது சனாதனம் தான். வெற்றிபெறப் போவது ஜனநாயகம் மற்றும் மதச்சார்பின்மை கொள்கைக் கவசங்களோடு விளிம்புநிலை மக்கள் பக்கம் நிற்கும் இந்தியா கூட்டணி தான்.

# மக்கள் ஆதரவோடு தெருமுனைக் கூட்டங்கள்

**சென்னை :** சென்னை மாவட்டக் கழக சார்பில் எது திராவிடம்? எது சனாதனம்? தெருமுனைக் கூட்டங்கள் 28.08.2023 திங்கள் அன்று சிந்தாதிரிப்பேட்டை, சாமி நாயக்கன் தெருவில் மாலை 5 மணிக்கும், மாலை 7:30 மணியளவில் கலவைத் தெருவிலும் நடைபெற்றது.

அனைத்து சாதி அர்ச்சகர் பயிற்சி பெற்ற மாணவர்கள் சங்கத் தலைவர் ரங்கநாதன், சென்னை மாவட்ட செயலாளர் உமாபதி, தமிழ்நாடு மாணவர் கழகம் தேன்மொழி, விடுதலைச் சிறுத்தைகள் கட்சி மாவட்ட அமைப்பாளர் விடுதலைச் செழியன் ஆகியோர் உரையாற்றினர்.

29.08.2023 செவ்வாய் மாலை 6 மணிக்கு தரமணி நூறடி சாலையிலும், அதனைத் தொடர்ந்து இரவு 8 மணிக்கு பெருங்குடி நூறாடி சாலையில் நடைப்பெற்றது.

மாவட்டக் கழகச் செயலாளர் இரா.உமாபதி, பெரியார் நம்பி, இணையதளப் பொறுப்பாளர் விஜயகுமார், எட்வின் பிரபாகரன், இரண்யா ஆகியோர் கூட்டத்தின் நோக்கத்தை விளக்கிப் பேசினார்கள்..

கூட்டத்தில் பங்கேற்ற கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன், கருத்துரையாற்றிய தோழர்களுக்கு நூல்களை வழங்கி பாராட்டுத் தெரிவித்தார்.

30/08/2023 சென்னை பாலவாக்கம் - துரைப்பாக்கம் பகுதிகளில் நடைபெற்றது.

முதல் கூட்டம் பாலவாக்கம் அண்ணா சாலையில் பூர்ணிமா தலைமையில் மாலை 5 மணிக்கு தொடங்கியது. இரண்டாம் கூட்டம் துரைப்பாக்கம் 200 அடிச் சாலையில் முழக்கம் உமாபதி தலைமையில் மாலை 7 மணிக்கு தொடங்கியது. கழக இணையதளப் பொறுப்பாளர் விஜய் குமார், பகுதிச் செயலாளர் எட்வின் பிரபாகரன் ஆகியோர் கூட்டத்தின் நோக்கத்தை விளக்கிப் பேசினார்கள். நூற்றுக்கணக்கான IT ஊழியர்கள் உரைகளை ஆர்வத்தோடு கேட்டனர். இரவு உணவை தோழர் விஜய் குமார் ஏற்பாடு செய்திருந்தார்.

31.08.2023 அன்று 79வது கூட்டம் மாலை 5 மணிக்கு சுண்ணாம்பு கொளத்தூர் மைதானம் அருகிலும், 80வது கூட்டம் இரவு 8 மணிக்கு நன்மங்கலம் ஏழுமலை தெருவிலும் நடைப்பெற்றது. அருண் கோமதி தொடக்கவுரையாற்றினர்.

திராவிட முன்னேற்றக் கழக 1வது வார்டு மாமன்ற உறுப்பினர் பாலாஜி கூட்டத்தில் கலந்து கொண்டு தோழர்களுக்கு பயனாடை அணிவித்து பாராட்டு தெரிவித்தார்.

01.09.2023 வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு புழுதிவாக்கம் பேருந்து நிலையம் அருகிலும், மாலை 8 மணிக்கு ஆலந்தூர் மண்டித் தெருவிலும் நடைப்பெற்றது. காஞ்சிபுரம் மாவட்டச் செயலாளர் இரவி பாரதி, அருண் கோமதி ஆகியோர் தொடக்க உரையாற்றினர். நாத்திகன் - உமாபதி குழுவின் நையாண்டி அரசியல் கலை நிகழ்ச்சி அரங்கேறியது. முதல் கூட்டத்தில் CPI (M) பகுதிச் செயலாளர் வெங்கடேசன், திமுக மாவட்ட பிரதிநிதி வேல்முருகன், பெரியாரியலாளர் கனகராஜ் ஆகியோரும், இரண்டாவது கூட்டத்தில் ஆலந்தூர் பகுதி திமுக நிர்வாகிகளான மணிகண்டன், கார்த்திக், தீபக், விசிக சிறுபான்மையினர் அணி மாநில துணைச் செயலாளர் அபு உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். நிறைவாக பங்கேற்ற கழகத் தோழர்கள் அனைவருக்கும் திமுக நிர்வாகிகள் பயனாடை அணிவித்து பாராட்டு தெரிவித்து, அனைவருக்கும் இரவு உணவை ஏற்பாடு செய்து கொடுத்தனர்.

**கோவை :** கோவை மாவட்ட கழகத்தின் சார்பில் எது சனாதனம்? எது திராவிடம்? 15வது தெருமுனைக் கூட்டம் ரத்தினபுரி ஜீவானந்தம் திமுக அலுவலகம் முன்பு நடைப்பெற்றது.

மாநகர அமைப்பாளர் மாதவன் தலைமை வகித்தார். கூட்டத்தை திமுக வட்டச் செயலாளர் செல்வமணி தொடங்கி வைத்தார். கிருஷ்ணன் - புரட்சி தமிழன் குழு தெருமுனைக் கூட்ட விளக்கப் பாடல்களைப் பாட, நிர்மல்குமார் - வெங்கடேசன் குழு கேள்வி- பதில் உரையாடல் நிகழ்வை நடத்தினர்.

கழகப் பொருளாளர் திருப்பூர் துரைசாமி,மார்க்சிஸ்ட் கட்சி மாவட்ட செயற்குழு உறுப்பினர் முருகேசன், மதிமுக கணபதி பகுதி செயலாளர் இராமநாதன், கழக கோவை மாவட்ட செயலாளர் சூலூர் பன்னீர்செல்வம் தமிழ்நாடு மாணவர் கழக மகிழவன் ஆகியோர் கூட்டத்தின் நோக்கத்தை விளக்கிப் பேசினார்கள்.

நிறைவாக மாநகரச் செயலாளர் வெங்கடேசன் நன்றி கூறினார்.

**ஈரோடு வடக்கு :** ஈரோடு வடக்கு மாவட்ட கழக சார்பில் 27.08.2023 ஞாயிறு அன்று மாலை 04.30 மணியளவில் திங்களூரிலும், இரண்டாவது கூட்டம் மாலை 6:00 மணிக்கு துடுப்பதியிலும் நடைபெற்றது.

அர்ச்சுனன், துரை, செந்தில், வெள்ளதுரை, சந்தோஸ்குமார் ஆகியோர் தலைமை வகித்தனர். பெரியார் விழுதுகள் அறிவுக்கனல் - யாழ்மதியின் பெரியாரியப் பாடல்களுடன் கூட்டம் தொடங்கியது.

மாவட்டக் கழக அமைப்பாளர் கோபி நிவாசு, நம்பியூர் ரமேசு தொடக்கவுரையாற்றினர். கழக வெளியீட்டுச் செயலாளர் இராம.இளங்கோவன், தலைமைக் கழகப் பேச்சாளர் கோபி வேலுச்சாமி ஆகியோர் கூட்டத்தின் நோக்கத்தை விளக்கிப் பேசினார்கள்.

நிறைவாக மாவட்டச் செயலாளர் எலத்தூர் செல்வக்குமார் நன்றி கூறினார்.

**திண்டுக்கல் :** திண்டுக்கல் மாவட்ட கழக சார்பில் ஒட்டன்சத்திரம் பகுதிக்கு உட்பட்ட வெரியப்பூர் பேருந்து நிலையம், வெரியப்பூர் ஊராட்சி மன்ற அலுவலகம் முன்பு, கேதையறும்பு, தாராபுரம் சாலை, ஒட்டன்சத்திரம் பேருந்து நிலையம், லக்கயன்கோட்டை, அத்திக்கோம்பையிலும் ஆகஸ்ட் 27,28 ஆகிய இரண்டு நாட்கள் தெருமுனைக் கூட்டங்கள் நடைபெற்றது.

கபாலி, பெரியார், ராஜா ஆகியோரின் பகுத்தறிவுப் பாடல்களுடன் கூட்டம் தொடங்கியது.

தேனி ராயன், மாவட்ட அமைப்பாளர் மருதமூர்த்தி கூட்டத்தின் நோக்கத்தை விளக்கிப் பேசினார்கள்.

மாவட்ட இணையதள பொறுப்பாளர் ராஜா கூறினார்.

தோழர்கள் இரவு தங்குவதற்காக அறைகளை வழக்குரைஞர் ஜெயராஜ், மண்டப உரிமையாளர் ரஹ்மத்துல்லா, ஆகியோர் ஏற்பாடு செய்தனர்.

## வினா விடை

- ஒரே நாடு ஒரே தேர்தல் : ஒன்றிய ஆட்சி திட்டம் – செய்தி

  ஒரே ஜாதி, ஒரே மக்கள் என்ற திட்டத்தை எப்போது கொண்டுவர போறீங்க..

- அண்ணாமலை பிராமணர்களை புறக்கணிக்கிறார் – எஸ்.வி.சேகர்

  அப்படியா, விடாதிங்க; சத்ரு சம்ஹார யாகம் நடத்துங்க, நல்ல பலன் கிடைக்கும்.

- நெடுஞ்சாலை திட்டத்துக்கு கூடுதல் செலவு ஆகியுள்ளது என்று தான் சி.ஏ.ஜி அறிக்கை கூறுகிறது. அது ஊழல் அல்ல – அண்ணாமலை

  அந்த கூடுதல் செலவுக்கே காரணம் ஊழல் இல்லையா என்பதுதான் கேள்வியே?

- சனாதன தர்மத்தை எதிர்க்க எதிர்க்க அது வளரும் – தமிழிசை

  அப்படியா, சனாதன தர்மம் மாறவே மாறாததுன்னு சொன்னீங்க, இப்ப எப்படி வளரும்.

- திராவிட கட்சிகள் எனது பங்காளிகள், எதிரி அல்ல – சீமான்

  பயப்படாதிங்க சீமான், அவ்வளவு சீக்கிரம் கைது செய்யமாட்டாங்க.

- நான் ஒரு முஸ்லிமாக இருந்தாலும் எனக்கு கோயில் கட்டினார்கள். அதுதான் சனாதன தர்மம் – குஷ்பு

  மசூதி கட்டியிருந்தால் இடிச்சிருப்பாங்க மேடம்

# இழி தொழில்களை தலித் மக்கள் செய்ய வேண்டும் என்று பெரியார் சொன்னாரா?

# அவதூறு பரப்புவோருக்கு மறுப்பு (1)

**கொளத்தூர் மணி**



பெரியார் முடிவெய்தி 50 ஆண்டுகள் கழிந்த பின்னரும் பெரியார் பற்றிய நினைவுகளும், அதனால் ஏற்படும் அதிர்வுகளும் தாக்கங்களும் ஒவ்வொரு நாளும் வெளிப்பட்டுக் கொண்டே இருக்கின்றன.

பாரதிய ஜனதா கட்சி, நாம் தமிழர் கட்சி, தோழர் அல்லது அய்யா பெ.மணியரசன் (நோக்கம் வேறுவேறாகக் கூட இருக்கலாம்) போன்ற விபீசண, அனுமார் கூட்டங்கள் சில வரிகளை உருவி எடுத்தும், திரித்தும் எப்படியேனும் பெரியாரை, திராவிடத்தை கொச்சைப்படுத்த வேண்டும் என்று செயல்பட்ட வண்ணம் உள்ளனர். இவர்களுக்கு தரவுகளைத் தேடும் சிரமத்தை இவர்களது முன்னோடிகளான ரவிக்குமார், குணா, ம.பொ.சி, வ.வே.சு அய்யர் போன்ற பலரின் அன்றைய பதிவுகள் பயன்படுகின்றன. ஒருமுறை பார்ப்பன பேச்சு அடியாள் எச்.ராஜாவிடம் "பெரியாரைப் படித்திருக்கிறீர்களா? என்று கேட்டதற்கு "நான் மணியரசன் எழுதி வருவதைப் படிக்கிறேன்; அதுவே போதும்" என்றான்.

அப்படித்தான் பல வாழ்க்கை வரலாறுகளும் கூட எழுதப்பட்டு வருகின்றன. ஓர் எடுத்துக்காட்டாக தோழர் 'பாலசிங்கம் இராஜேந்திரன்' என்பவர் எழுதி 'நீலம்' வெளியீட்டில் "இளையபெருமாள் வாழ்க்கை சரித்திரம்" என்ற நூலும் வெளிவந்துள்ளது. நான் கடந்த மாதம் மதுரையில் கலந்துகொண்ட ஒரு கருத்தரங்கிற்கு முன்னதாக இந்நூலை எழுதிய ஆசிரியருக்குப் பாராட்டு விழா நடந்தது. அந்த நாளில் அந்த நூல் எனக்குக் கிடைக்கவில்லை, அதன் பின்னர் தோழர் ஒருவர் வழியாக இந்த நூல் அண்மையில் தான் எனக்கு கிடைத்தது.

'அரசியல் தலைவர்களுடனான உறவும் முரணும்' என்ற தலைப்பிட்ட அந்நூலின் 13வது அத்தியாயத்தில் ஈ.வெ.ரா. பெரியார் என்ற உட்தலைப்பில் சில செய்திகள் பதிவாகியுள்ளன.

1948ஆம் ஆண்டு சிந்தாதிரிப்பேட்டையில் இருந்த பெரியார் வீட்டில் அவரை சந்தித்து "எங்களது சமூகம் அனுபவித்து வரும் கொடுமைகளுக்கு இழிதொழில் செய்ய நிர்பந்திப்பதும் ஒரு முக்கியக் காரணமாகும். ஆகையால் எங்களின் இழிதொழில் ஒழிப்புப் போராட்டங்களுக்கு தங்களது ஆதரவைத் தர வேண்டும்" என்று கேட்டார் இளையபெருமாள். இதற்கு பெரியார், "உங்களுடைய சமூகத்தவர்கள் இந்த தொழில்களை செய்யவில்லை என்றால், யார் செய்வார்கள்? என்று கேட்டார்.

(அதன் மீது நூலாசிரியர் தன் கருத்தாக, "பிராமணர்களுக்கு எதிராக அனைத்து சமூகத்தவர்களும் ஒன்றுபட்டு போராட வேண்டும் என்று சொன்ன பெரியார், நடைமுறையில் இப்படிப்பட்ட சாதி இந்துக்குரிய குணத்தையே பெற்றிருந்தார்" என்றும் குறிப்பிட்டுள்ளார்.)

இவை எந்த ஆதாரத்தின் மீது எழுதப்பட்டுள்ளது என்பதற்கு எந்த குறிப்பும் அதில் இல்லை, ஆனாலும் பிற்சேர்க்கையாக "பயன்பட்ட ஆவணங்கள்" என்ற பட்டியல் உள்ளது. அதில் முதலாவதாக குறிப்பிடப்பட்டுள்ள ரவிக்குமார் எழுதிய 'இளையபெருமாள் – வாழ்வும் பணியும்' என்ற 2010ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டிருந்த நூல் என்னிடமே இருந்தது, அதில் தேடினேன். அந்நூல் முழுவதும் இளையபெருமாள் அவர்களின் வரலாற்றை அவரே சொல்வது போன்று எழுதப்பட்டுள்ளது.

நூலாசிரியர் தோழர் ரவிக்குமார் தனது முன்னுரையில் "அவரது 75வது பிறந்தநாளின் போது அவரிடம் பதிவு செய்யப்பட்ட அவரது சுருக்கமான தன் வரலாற்றை 'சித்திரை நெருப்பு' என்ற பெயரில் சிறு நூலாக வெளியிட்டேன்" என்றும் குறிப்பிட்டுள்ளார். இந்நூலின் தொடக்கமும் 'சித்திரை நெருப்பு' என்றுதான் தலைப்பிடப்பட்டுள்ளது. ஒருவேளை தோழர் ரவிக்குமார் அவர்கள் முன்னர் வெளியிட்டிருந்த 'சித்திரை நெருப்பு' என்ற சிறு நூலின் மறுபதிப்பாக இந்நூல் இருக்கக் கூடும். நூலின் தலைப்பை மட்டும் 'எல்.இளையபெருமாள் வாழ்வும் பணியும்' என்று மாற்றியிருக்கலாம்.

எப்படியோ, அந்நூலில் உள்ள "பறை அடிப்பது பற்றி" என்ற உட்தலைப்பில் உள்ள பகுதியில் பெரியார் பற்றி அவதூறு பதிவாகியுள்ளது.

"சமூகத்தில் இழித்தொழிலாய் இருக்கின்ற இந்த தொழில்களை ஒழிப்பதற்கு அரசியல்வாதிகள் முன் வரவில்லை. சமூக சீர்திருத்தவாதிகளும் முன்வரவில்லை. ஏன் பெரியார் அவர்களிடமே கேட்டேன். 'இந்தத் தொழில்களை வேறு யார் செய்வது? இளையபெருமாள், நீயே ஒரு மாற்று கூறு' என்று சொன்னார். 1948, டிசம்பர் 20ம் தேதி சிந்தாதிரிப்பேட்டை வீட்டிலே சந்திக்கும் போது சொன்னார்" என்பது தான் அந்த பகுதி.

இது ஒரு புனையப்பட்ட பொய்யே ஆகும். எந்த அடிப்படையில் அதனைப் பொய் என்கிறோம்?

23.11.1946 அன்று திராவிடர் கழக ஏடான 'விடுதலை' இதழில் ஜாதியை ஒழிப்பதற்குக் காங்கிரசில் திட்டமில்லை, ஹிந்துமத ஸ்தாபனமே காங்கிரஸ் வாணியம்பாடியில் பெரியார் பேச்சு!

பறைகள், தப்பட்டைகள் தீக்கரையாயின!

எனும் தலைப்பில் ஒரு செய்தி வந்துள்ளது. 22.11.1946 அன்று வாணியம்பாடி சந்தைப்பேட்டையில் செட்யூல்டு வகுப்பார் பெடரேசனால் ஏற்பாடு செய்யப்பட்டு ஒரு கூட்டம் நடைபெற்றுள்ளது.

> • இழி தொழில்களை தலித் மக்கள் தான் செய்ய வேண்டும் என்று – மறைந்த தலித் உரிமைப் போராளி இளையபெருமாளிடம் பெரியார் கூறியதாக ரவிக்குமார் எழுதியிருப்பது பச்சைப் பொய்.
>
> • 22.11.1946இல் பெரியார் வாணியம்பாடி கூட்டத்தில் பெரியார் முன்பாக பறை, தப்பட்டைகளை தீயிட்டு பொசுக்கப்பட்டது என்பது வரலாறு.
>
> • திராவிடர் கழகத் தோழர்கள் பறை, தப்பட்டைகளை தமிழ்நாடு முழுவதும் கொளுத்த ஆதரவு தர வேண்டும் என்று குடிஅரசில் (21.12.1946) துணைத் தலையங்கம் எழுதப்பட்டது.

அப்போது இந்தியாவில் அமைக்கப்பட்ட இடைக்கால அமைச்சரவையில், (பெரியார் அந்த உரையில் 'இந்திய மத்திய அதிகார சபை'யில் என்கிறார்) முஸ்லீம் லீக்குக்கு ஒதுக்கப்பட்ட 5 இடங்களில் ஒரு இடத்தை செட்யூல்டு வகுப்பார் பெடரேசன் தோழர் ஒருவருக்கு முஸ்லீம் லீக் அளித்தது.அதற்காக ஜனாப் ஜின்னா அவர்களை பாராட்டி நடத்தப்பட்ட கூட்டம் அது. (அவ்வாறு ஒதுக்கப்பட்ட இடத்தில் நியமிக்கப்பட்டவர் வங்காளத்தைச் சேர்ந்த ஜோகேந்திரநாத் மண்டல் என்பவர். இடைக்கால அமைச்சரவை 2.9.1946ல் அமைக்கப்பட்ட போது காங்கிரசுக்கு இணையான இடங்கள் தங்களுக்கும் ஒதுக்கப்பட வேண்டும் என்ற முஸ்லிம் லீக் கோரிக்கை ஏற்கப்படாததால் முஸ்லீம் லீக் பங்கேற்க மறுத்துவிட்டது. அதனால் 12இடைக்கால அமைச்சர்களும் காங்கிரசாராகவே நியமிக்கப்பட்டனர். வைசிராய் வேவல் அவர்களின் முயற்சியில் மீண்டும் அமைச்சரவை புதுப்பிக்கப் பட்டது. அதில் இந்திய முஸ்லிம் லீக்குக்கு 5 இடங்கள் என்றும், காங்கிரசுக்கு 8 இடங்கள் என்றும் முடிவாகிறது. அவ்வாறு முஸ்லீம் லீக்குக்கு ஒதுக்கப்பட்ட 5 இடங்களில் ஒரு இடத்தை தான் செட்யூல்டு வகுப்பார் பெடரேசன் உறுப்பினர் ஜோகேந்திரநாத் மண்டல் அவர்களுக்கு வழங்கி முகமது அலி ஜின்னா அவரை இந்தியாவின் சட்ட அமைச்சராக்குகிறார்.

### ஜோகேந்திரநாத் மண்டல் என்பவர் யார்?

புரட்சியாளர் அம்பேத்கர் அவர்களால் 1942 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட செட்யூல்டு வகுப்பார் பெடரேசனின் வங்காள மாகாணத் தலைவரே ஜோகேந்திரநாத் மண்டல் ஆவார். அவர் வங்காள மாகாண முஸ்லீம் லீக் தலைமையிலான அமைச்சரவையில் நிதி, பொதுப்பணித்துறை அமைச்சராகவும் இருந்தவர் ஆவார்.

இந்தியாவின் அரசியல் நிர்ணய சபைக்கு பம்பாய் மாகாணத்திலிருந்து அம்பேத்கர் அவர்கள் தேர்வாக முடியவில்லை, வங்காளத்தின் செட்யூல்டு வகுப்பினர், பழங்குடி உறுப்பினர் ஆகியோரின் வாக்குகளை முயன்றுபெற்று அரசமைப்பு அவைக்கு அம்பேத்கரை அனுப்பி வைத்தவர் இதே ஜோகேந்திரநாத் என்பவர் தான்.

1947ல் பாகிஸ்தான் பிரிந்த போது இவர் கிழக்கு வங்காளத்தை சேர்ந்தவர் (கிழக்கு பாகிஸ்தான்) என்பதால், பாகிஸ்தான் அரசமைப்பு அவையின் தற்காலிகத் தலைவராகவும், பின்னர் பாகிஸ்தானின் சட்டம், நீதித்துறை அமைச்சராகவும், கூடுதல் பொறுப்பாக தொழிலாளர் நலத்துறை, காமன்வெல்த், காஷ்மீர் விவகாரத்துறை அமைச்சராகவும் இருந்தவர்.அந்த ஜோகேந்திரநாத் மண்டல் இந்திய இடைக்கால அமைச்சரவையில் சட்ட அமைச்சராக 25.10.1946 அன்று பதவி ஏற்றார். பாகிஸ்தான் பிரிவினை வரை அப்பதவியில் தொடர்ந்தார்).

அவ்வாறு செட்யூல்டு வகுப்பார் பெடரேசன் உறுப்பினரான ஜோகேந்திரநாத் மண்டலுக்கு அமைச்சர் பதவியை வழங்கிய ஜனாப் முகமது அலி ஜின்னாவை பாராட்டவே நடத்தப்பட்டது அக்கூட்டம்.

அவ்வாறு22.11.1946அன்றுவாணியம்பாடியில் செட்யூல்டு வகுப்பார் பெடெரேசனால் ஏற்பாடு செய்யப்பட்ட அக்கூட்டத்திற்கு தோழர் ஏகாம்பரம் தலைமை தாங்கினார். தொடர்ந்து செட்யூல்டு வகுப்பார் பெடரேசனின் மாநில செயலாளர்கள் தளபதி பள்ளிகொண்டா கிருஷ்ணசாமி, ஆதிமூலம் ஆகியோரின் உரையைத் தொடர்ந்து பெரியார் உரையாற்றியுள்ளார். அவ்வுரையில் இழிவைத் துடைக்க இஸ்லாமியராவதே சிறந்த வழி என்றும் வலியுறுத்தியுள்ளார்.

கூட்டத்தின் முழு உரையும் 23.11.1946 நாளிட்ட விடுதலை ஏட்டில் வெளிவந்துள்ளது. இறுதியில் 'பறைகள் தீக்கிரை' என்ற உட் தலைப்பில் செய்தி வெளியாகியுள்ளது.

பெரியார் (மேடையில் இருந்து இறங்கி மேடையின் எதிரில்) உட்கார்ந்தவுடன் செட்யூல்டு வகுப்புத் தோழர்கள் தப்பட்டைகள், தாசாக்கள், மத்தளங்கள் முதலிய பலதரப்பட்ட தோற்கருவிகளுடன் சுமார் 100 பேர்கள் திடீரென்று மேடை அருகே வந்தார்கள்.வந்தவுடன் கூட்டத்தில் தடபுடல் ஏற்பட்டது. பெரியார் அமைதியாய் இருக்கும்படி வேண்டி, அமைதி ஏற்படுத்திய பிறகு, பெரியாரின் முன்னிலையில் அவைகளை போட்டு குவித்துவிட்டு ஒருவர் மேடை மீது ஏறி நின்று, "நாங்கள் பறை அடிப்பதால் தானே பறையர்கள் என்று அழைக்கப்படுகிறோம். இனிமேல் பறை அடிப்பதில்லை. சாவு வீட்டிற்கும், வாழ்வு வீட்டிற்கும், சாமி வீட்டிற்கும் கண்டிப்பாக பறை அடிப்பதில்லை என்று இப்போது உறுதி செய்து கொண்டோம். அதற்காக அந்தக் கருவிகளை இதோ கொளுத்தி விடுகிறோம்" என்று சொல்லி 4,5 புட்டி மண்ணெண்ணையை ஊற்றி நெருப்பு வைத்தார். நெருப்பு திகு,திகு என்று எரிந்தது. யாவரும் ஆரவாரித்தார்கள்.

"டாக்டர் அம்பேத்கர் அனுமதி வந்ததும் நாங்கள் பெண்டு பிள்ளைகளுடன் மதம் மாறுவோம்" என்று ஒலித்துக் கொண்டு கலைந்து சென்றார்கள், என்பதுவே அந்த செய்தி.

நாடு முழுவதும் பறைகளை எரிக்க பெரியார் வேண்டுகோள் விடுத்த வரலாற்றை அடுத்த இதழில் பார்ப்போம்.

(தொடரும்)

date of publication - every thursday tamil weekly Reg.No.tn/cc(S)Dn/459/22-24 licenced to post wpp no.tn/PMG(ccR)/WPP-462/22-24
puratchi periyar muzhakkam registered with the registrar of newspaper for india under no.tntam/2002/07776

# 'தினமலம்' பார்ப்பன ஏட்டுக்கு தீ!

**காலை சிற்றுண்டி வழங்குவதன் காரணமாக பள்ளிக் கழிவறைகள் நிரம்பி வழிகின்றன என்ற வர்ணாசிரம திமிரோடு தலைப்பு செய்தி வெளியிட்ட தினமலம் நாளேட்டை கழகத் தோழர்கள் தீயிட்டுக் கொளுத்தினர்.**

**சென்னை** : பள்ளி மாணவர்களுக்கு “காலை சிற்றுண்டி” திட்டத்தை இழிவுபடுத்தி செய்தி வெளியிட்ட சனாதன வெறி பிடித்த தினமலரை கண்டித்து தினமலம் நாளிதழ் எரிப்பு போராட்டம் இன்று 01.09.2023 வெள்ளிக்கிழமை காலை 11 மணியளவில் தினமலம் நாளேடு அலுவலகம் அருகே இராயப்பேட்டை மணிக்கூண்டு அருகில் நடைபெற்றது.



கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் போராட்டத்திற்கு தலைமை வகித்தார்.

ஆர்ப்பாட்டத்தில் தினமலம் நாளிதழை தீயிட்டு கொளுத்தி தினமலம் நிர்வாகத்திற்கு எதிராக முழக்கங்கள் எழுப்பப்பட்டன.

மாவட்டக் கழகச் செயலாளர் இரா.உமாபதி, ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்க வளர்மதி, தமிழ்நாடு மாணவர் கழக இரண்யா உள்ளிட்டோர் கண்டன உரையாற்றினர். கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் நிறைவுரையாற்றினார்.

கழகத் தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், கரு. அண்ணாமலை, சேத்துப்பட்டு இராசேந்திரன், மயிலை இராவணன் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் இருந்து கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர்.

**திண்டுக்கல்** : தமிழ்நாட்டில் காலைச் சிற்றுண்டி திட்டத்தையும் பள்ளி மாணவர்களையும் இழிவுபடுத்திய தினமலத்தை கண்டித்து பழனியில் உள்ள தந்தை பெரியார் சிலை முன்பாக கழகத் தோழர்கள் தினமலர் நாளிதழை தீயிட்டு கொளுத்தினர்..

மாவட்ட அமைப்பாளர் மருதமூர்த்தி, மாவட்ட ஒருங்கிணைப்பாளர் மாக்சிம் கார்க்கி, மாவட்ட இணையதளப் பொறுப்பாளர் ராஜா, ஒட்டன்சத்திரத்திரம் ஒன்றிய அமைப்பாளர் கபாலி, பழனி நகர அமைப்பாளர் பெரியார், ஒன்றிய அமைப்பாளர் நாச்சிமுத்து, தமிழ்நாடு மாணவர் கழக ஆயுதன், சூர்யா, தினேஷ், திராவிடர் இயக்கத் தமிழர் பேரவை மாவட்டத் தலைவர் தமிழ்முத்து, விடுதலைச் சிறுத்தைகள் கட்சி மாவட்ட செயற்குழு உறுப்பினர் அன்பழகன் ஆகியோர் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றனர்.

**சேலம்** : “காலை உணவுத் திட்டம் மாணவர்களுக்கு டபுள் சாப்பாடு! ஸ்கூல் கக்கூஸ் நிரம்பி வழிகிறது!” என்று இழிவான தலைப்பிட்டு செய்தி வெளியிட்ட தினமலம் நாளிதழைக் கண்டித்து 31.08.2023 மதியம் 2 மணியளவில் சேலம் தினமலர் அலுவலகம் முன்பு கழகத் தலைமைக் குழு உறுப்பினர் காவை ஈசுவரன் தலைமையில் , சேலம் கிழக்கு மாவட்ட தலைவர் சக்திவேல் முன்னிலையில், தினமலர் நாளிதழ் எரிப்பு போராட்டம் நடைபெற்றது.

நங்கவள்ளி கிருஷ்ணன், பாலு, கண்ணன், அருள்குமார், பிரபாகரன், இளம்பிள்ளை தங்கதுரை, திவ்யா, ஏற்காடு தேவா, கார்த்திகேயன், செல்வகுமார், அனேஷ்குமார், சேலம் மாநகரம் வெற்றிமுருகன், தேவராஜ், ஆர்.எஸ். நாகராஜ், மூலப்பாதை கவியரசு உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**கொளத்தூர்** : தமிழ்நாடு அரசின் காலை உணவு திட்டத்தை இழிவுப்படுத்தி செய்தி வெளியிட்ட சனாதன வெறி பிடித்த தினமலரை கண்டித்து தினமலம் நாளிதழ் எரிப்பு போராட்டம் 01.09.2023 மாலை 4 மணியளவில் கொளத்தூர் பேருந்து நிலையத்தில் நடைபெற்றது.

சேலம் மேற்கு மாவட்ட தலைவர் சூரியகுமார் போராட்டத்திற்கு தலைமை வகித்தார். சேலம் மேற்கு மாவட்ட செயலாளர் கோவிந்தராசு, மேட்டூர் நகர தலைவர் மார்ட்டின், கொளத்தூர் நகர தலைவர் ராமமூர்த்தி, கொளத்தூர் ஒன்றிய பொறுப்பாளர் தர்மலிங்கம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் தினமலம் நாளிதழை தீயிட்டு கொளுத்தி தினமலர் நிர்வாகத்திற்கு எதிராக முழக்கமிட்டனர்.

தலைமைக் குழு உறுப்பினர் சக்திவேல், சேலம் மாவட்ட அமைப்பாளர் நங்கவள்ளி அன்பு, தலைமைக் குழு உறுப்பினர் காவை ஈசுவரன், தமிழ் புலிகள் கட்சி பிரசாந்த், விசிக கொளத்தூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் சேட்டுகுமார், திமுக கொளத்தூர் நகர தலைவர் நடராஜன் உள்ளிட்டோர் கண்டன உரையாற்றினர்.

திருப்பூர் : திராவிட மாடல் ஆட்சியின் சிறப்பான திட்டமான பள்ளிக் குழந்தைகளுக்கான காலை உணவு திட்டத்தை இழிவுபடுத்தி எழுதிய தினமலம் நாளிதழை எரிக்கும் போராட்டம் 01.09.2023 அன்று மாலை 4.30 மணிக்கு திருப்பூர் பெரியார் சிலை அருகில் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்திற்கு கழகப் பொருளாளர் துரைசாமி தலைமை தாங்கினார். மாவட்ட தலைவர் முகில் ராசு முன்னிலை வகித்தார்.

ஆர்ப்பாட்டத்தில் தினமலம் கண்டித்து முழக்கங்கள் எழுப்பப்பட்டு தினமலர் நாளிதழ்கள் தீ வைத்து கொளுத்தப்பட்டது.

ஆதித்தமிழர் பேரவை, புரட்சிகர இளைஞர் முன்னணி,திராவிட தமிழர் கட்சி,மக்கள் பாதுகாப்பு அமைப்பு ஆகிய அமைப்புகள் உள்ளிட்ட தோழமை இயக்கங்கள் பங்கேற்றன.

ஆர்ப்பாட்டத்தில் கழகப் பொருளாளர் துரைசாமி, மாவட்ட கழகத் தலைவர் முகில்ராசு, ஆதித்தமிழர் பேரவை துணைப் பொதுச் செயலாளர் விடுதலைச் செல்வன், புரட்சிகர இளைஞர் முன்னணியின் தமிழ் அமுதன், திராவிட தமிழர் கட்சியின் மண்டல செயலாளர் கார்த்திகேயன், மக்கள் பாதுகாப்பு அமைப்பின் கார்மேகம், மதிமுக கௌரிசங்கர், திமுகவின் அன்புராஜ் ஆகியோர் கண்டன உரையாற்றினர்

சங்கீதா, முத்து, மாரிமுத்து, மாதவன், ராமசாமி, அய்யப்பன், தாராபுரம் செல்வம், ராஜா, ஹரிஷ், ராஜ்குமார், ஆத்துப்பாளையம் மதன், ஜோதி, பரந்தாமன், ஜெகதீசன், அணைமேடு டேவிட்,பிரபாகரன், அமுல்ராஜ், கல்பனா, பாப்பாத்தி, சங்கீதா, பெரியார் பிஞ்சு யாழிசை உள்ளிட்ட 40க்கும் மேற்பட்ட தோழர்கள் பங்கேற்றனர்.

**ஈரோடு வடக்கு** : 01-09-2023 காலை 11:00 மணியளவில் கோபிசெட்டிபாளையம் பேருந்து நிலையத்தில் தினமலர் நாளிதழ் எரிப்புப் போராட்டம் பெரியாரிய-மார்க்சிய கூட்டமைப்பு சார்பில் நடைபெற்றது.

கழக வெளியீட்டுச் செயலாளர் இராம.இளங்கோவன், மாவட்டச் செயலாளர் எலத்தூர் செல்வக்குமார், கோபி அருளானந்தம், கோபி நகர பொறுப்பாளர் ரகுநாதன், கோபி நகர செயலாளர் ஜெகநாதன், மாவட்ட இளைஞரணி தலைவர் கலைச்செல்வன், ராஜன் பாபு, இராவணன், குள்ளம்பாளையம் ஆனந்த், திராவிடர் கழக மாநில பொதுக்குழு உறுப்பினர் யோகானந்தம், விடுதலை சிறுத்தைகள் கட்சி மு.மாவட்ட செயலாளர் அம்பேத்கர், தபெதிக மாவட்ட செயலாளர் குணா, தமிழ் புலிகள் கட்சி மாவட்ட செயலாளர் ப.பாலசுப்பிரமணியம் உள்ளிட்ட தோழமை இயக்கத் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

**வேலூர்** : ஒருங்கிணைந்த வேலூர் மாவட்ட கழக சார்பாக பார்ப்பனிய தினமலம் நாளிதழ் எரிப்புப் போராட்டம் நெமிலி பேருந்து நிலையத்தில் 01.09.2023 அன்று மாலை 5 மணியளவில் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்திற்கு திலீபன் தலைமை தாங்கினார். மக்கள் அதிகாரம் மோகன், அரசு ஊழியர் ஐக்கிய பேரவை பாலாஜி, விசிக திருநாவுக்கரசு, தமிழக மக்கள் முன்னணி அன்பு, அம்மு, ஜான்சி, மார்க்ஸிய ராணி, அரவிந்த்ராஜ், நியாஸ், நரேன், பகலவன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## ஆளுநரே திரும்பி போ
## திண்டுக்கல் மாவட்ட கழகம் கருப்புகொடி

திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல் அன்னை மதர்தெரசா பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவிற்கு வருகை தந்த தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவியை கண்டித்தும் அவருக்கு கருப்பு கொடி காட்டி எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில்

திராவிடர் விடுதலைக் கழகத்தின் மாவட்ட அமைப்பாளர் மருதமூர்த்தி தலைமையில் 10க்கும் மேற்பட்ட இயக்கத் தோழர்கள் ஒன்றாக இணைந்து பல்கலைக்கழகம் அருகே கருப்புக் கொடிகாட்டி போராட முயன்ற நிலையில் காவல்துறையினர் அனைவரையும் கைது செய்து பழனி அழைத்து வரப்பட்டு தனியார் திருமண மண்டபத்தில் அடைத்து வைத்தனர்.

தொடர்ந்து தமிழக கவர்னர் R.N.ரவியே திரும்பிப்போ சனாதானத்தின் மறு உருவமே வராதே உள்ளிட்ட பல்வேறு முழக்கங்களை எழுப்பியவாறு எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP Posted : September 08, 2023

owner and publisher by : k. rajendran, from 29, Journalists colony, thiruvalluvar nagar, thiruvanmiyur, chennai - 600 041.
and printed by : S. Theesmas, at lilly soosai offset, new no.8, old No.12/1, mohammed usain lane, royapettah, chennai - 600 014.
editor ; k. rajendran